பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
17 08 2024 **SATURDAY** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வளரும் நாடுகளின் குரல் ஒருமித்து ஒலிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. கொல்கத்தாவில் பெண் மருத்துவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து, நாடுமுழுவதும் மருத்துவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

3. தமிழகத்தில் அத்திக்கடவு - அவினாசி திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

4. இலங்கை சிறைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 13 பேர் இன்று சென்னை வந்து சேர்ந்தனர்.

5. பாரிஸ் பாராலிம்பிக் போட்டியின் தொடக்க விழாவில் இந்தியா சார்பில் தேசியக்கொடியை **Sumit Antil, Bhagyashree Jadhav** ஆகியோர் ஏந்திச் செல்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

வளரும் நாடுகளின் குரல் ஒருமித்து ஒலிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

வளரும் நாடுகளின் உச்சி மாநாட்டில் காணொலி வாயிலாக இன்று அவர் உரையாற்றினார்.

இந்திய தலைமைத்துவத்தின் கீழ் இந்த மாநாடு நடத்தப்படுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

ஜி-20 உச்சிமாநாட்டின் போது, இந்த அமைப்பில் ஆப்பிரிக்க யூனியன் நிரந்தர உறுப்பினராக சேர்க்கப்பட்டுள்ளது வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று அவர் குறிப்பிட்டார்.

உலகின் சில பகுதிகளில் நடைபெற்று வரும் மோதல் சம்பவங்கள் குறித்து கவலை தெரிவித்த அவர், இது வளர்ச்சிக்கு தடையாக உள்ளதாக கூறினார்.

வளரும் நாடுகளின் டிஜிட்டல் பொது கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக நிதியம் ஒன்றை இந்தியா ஏற்படுத்தியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதற்கான தொடக்கப் பங்களிப்பாக இந்தியா 200 கோடி ரூபாயை வழங்கும் என்று பிரதமர் கூறினார்.

>>>>><<<<<

கொல்கத்தாவில் பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு உட்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து, நாடுமுழுவதும் மருத்துவர்கள் 24 மணிநேர வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

இன்று காலை தொடங்கியுள்ள இந்த போராட்டம் நாளை காலை வரை நடைபெறும் என்று இந்திய மருத்துவர் சங்கம் அறிவித்துள்ளது.

மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கென, சட்டம் இயற்றப்பட வேண்டும் என்றும் அந்த சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இந்தப் போராட்டம் காரணமாக, தமிழகத்திலும் மருத்துவர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

>>>>><<<<<

வாரணாசி – அஹமதாபாத் இடையேயான சபர்மதி விரைவு ரயில், உத்தரபிரதேச மாநிலம், கான்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

இதில் அந்த ரயிலின் 20 பெட்டிகள் தடம் புரண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதன் காரணமாக, அந்த வழித்தடத்தில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

பயணிகள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளதாகவும், அவர்கள் மாற்று ஏற்பாடுகள் மூலம் பயணத்தை தொடர்வதாகவும் ரயில்வே கூறியுள்ளது.

இந்த சம்பவம் குறித்து கருத்து தெரிவித்துள்ள ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், அந்த விரைவு ரயிலின் எஞ்சின், தண்டவாளத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு பொருள்மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக கூறியுள்ளார்.

இதுகுறித்து காவல்துறையும், புலன் விசாரணை அமைப்புகளும் விசாரணை நடத்தி வருவதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

இந்தியாவின் வளர்ச்சி சீராக உள்ளதாக சர்வதேச செலாவணி நிதியத்தின் துணை நிர்வாக இயக்குநர் டாக்டர் கீதா கோபிநாத் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், எதிர்பார்த்த இலக்கை விட வளர்ச்சி விகிதம் அதிகரித்தே காணப்பட்டதாக தெரிவித்தார்.

அடுத்த 3 ஆண்டுகளுக்குள் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும் என்றும் டாக்டர் கீதா கோபிநாத் தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தில், அத்திக்கடவு - அவனாசி திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக இன்று தொடங்கி வைத்தார்.

இதன்மூலம் இப்பகுதி மக்களின் 60 ஆண்டுகால கனவு நனவாகியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - மூர்த்தி 47 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

நில ஒதுக்கீடு முறைகேடு தொடர்பான வழக்கில் கர்நாடக முதலமைச்சர் திரு. சித்தராமையாவுக்கு எதிராக வழக்கு தொடுக்க அம்மாநில ஆளுநர் திரு. **Thawar Chand Gehlot** ஒப்புதல் அளித்துள்ளார்.

மைசூர் நகர மேம்பாட்டு ஆணையம், நில ஒதுக்கீடு தொடர்பாக நடைபெற்ற முறைகேட்டில் திரு. சித்தராமையாவுக்கு தொடர்பு உள்ளதாக கூறி, அவர்மீது நடவடிக்கை எடுக்க ஒப்புதல் அளிக்கக் கோரி

பெறப்பட்ட மனுவின் அடிப்படையில் ஆளுநர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

உத்தரபிரதேசத்தில் 69 ஆயிரம் உதவி ஆசிரியர் பணியிடங்களை பூர்த்தி செய்வதற்கான புதிய பட்டியலை தயாரிக்குமாறு, அம்மாநில அரசுக்கு அலஹாபாத் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. **A.R. Masoodi,** திரு. **Brijraj Singh** அமர்வு இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

>>>>><<<<<

இலங்கை சிறைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 13 பேர் இன்று சென்னை வந்து சேர்ந்தனர்.

விமான நிலையத்தில் மீன்வளத்துறை அதிகாரிகள் அவர்களை வரவேற்று, சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சுரேகா 51 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

புவி அறிவியல் ஒலிம்பியாட்டில் இந்தியா, மூன்று தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

சீனாவின் பெய்ஜிங்கில் நடைபெற்ற இப்போட்டியில் 35 நாடுகள் பங்கேற்றன.

இந்தியாவின் சார்பில் குஜராத், கேரளா, சத்திஷ்கர் மற்றும் ராஜஸ்தானைச் சேர்ந்த மாணவர்களைக் கொண்ட அணி இதில் பங்கேற்றது.

>>>>><<<<<

பங்களாதேஷ் இடைக்கால அரசின் ஆலோசகர்களாக நான்கு பேர் பதவியேற்றுக் கொண்டனர்.

டாக்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அதிபர் திரு. **Mohammed Shahabuddin** அவர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

இடைக்கால அரசின் முதன்மை ஆலோசகர் பேராசிரியர் **Mohammad Yunus** மற்றும் இதர ஆலோசகர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

**>>>>><<<<<**

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக, சத்திஷ்கர், மத்தியப்பிரதேசம், மகாராஷ்ட்ரா, ஒடிசா, மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் அடுத்த 6 நாட்களுக்கு கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

நாகாலாந்து, மணிப்பூர், மிஸோரம், திரிபுரா, சிக்கிம், அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம் மற்றும் மேகாலயா மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளிலும் வரும் வியாயழக்கிழமை வரை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தெலங்கானாவில் பெய்த கனமழை காரணமாக கரீம்நகர் மாவட்டத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிலையில், தமிழகத்தின் கன்னியாகுமரி, தென்காசி, திருநெல்வேலி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழைக்கும், நீலகிரி, திண்டுக்கல், திருப்பூர், தேனி, மதுரை, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமழைக்கும் வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது

**>>>>><<<<<**

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியின் தொடக்க விழா அணிவகுப்பில் இந்தியா சார்பில் தேசியக்கொடியை **Sumit Antil, Bhagyashree Jadhav** ஆகியோர் ஏந்திச் செல்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் வரும் 28ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 8ஆம் தேதிவரை நடைபெறவுள்ளன.

இந்தியாவின் சார்பில் இதுவரை இல்லாத அளவாக 84 பேர் பங்கேற்கின்றனர்.

>>>>><<<<<

பாரிஸ் ஒலிம்பிக் மல்யுத்தப் போட்டியில் இறுதியாட்டத்திற்கு முன்னேறி தகுதி நீக்கம் செய்யப்பட்ட இந்தியாவின் வினேஷ் போகத் இன்று புதுதில்லி திரும்பினார்.

விமான நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

>>>>><<<<<

உலக தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சார்பில் 42 பேர் பங்கேற்பார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆடவர் பிரிவில் **Himansu, Sachin** ஆகியோரும் மகளிர் பிரிவில் **Aarti**-யும் 10 ஆயிரம் மீட்டர் நடைப் போட்டியில் பங்கேற்கின்றனர்.

இப்போட்டிகள் **Peru**-வின் லிமா-வில் வரும் 27ஆம் தேதி தொடங்கி, 31ஆம் தேதிவரை நடைபெறவுள்ளன.

>>>>><<<<<

**Santo Domingo** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - பிரேஸிலின் **Fernando Romboli** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

**Valencia** ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 3-6, 7-6, 7-6 என்ற செட்கணக்கில் ஸ்விட்சர்லாந்தின் **Valentina Ryser** -ஐ வென்றார்.